## கண்டி மாநகர சபை

## கண்டி மாவட்டம்

01. நிதிக்கூற்றுக்கள்

1.2. நிதி கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் மாதம் 31 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் மாதம் 31 ஆம் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழியுல்ல அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு கணடி மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கணக்கீட்டுக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன

(அ) மீளாய்வாண்டின் கட்டமைப்புக்களுக்காக வாங்கப்பட்டிருந்த ப்லயி வுட் தகடுகளின் மதிப்புடைய ரூபா. 110,187 கணக்கிலிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ஆயர்வேத மருந்துகள் உற்பத்தி செய்யப்படும் இடத்திலிருந்த மருந்துத் தொகையின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா. 1,047,832 கணக்கிலிடப்பட்டிருக்காததோடு சபையின் கட்டுப்பாட்டுப் பிரதேச பிரதேசத்தினுள் காணப்படும் ஆயர்வேத சாலைகள் 10இல் காணப்பட்டத் தொகை கணக்கீடு செய்து கணக்குகளில் இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டின் மற்றும் அதற்கு முந்திய வருடங்களுக்காக பெறப்பட்டிருந்த ரூபா.3,105,607 நன்கொடைகள் மற்றும் பரிசுகள் சேமிப்புக் கணக்கில் இடப்பட்டிருந்தது.

(ஈ) நன்கொடையாக சபைக்கு கிடைக்கப்பெற்றிருந்த ரூபா. 32,249,999 பெறுமதியான 08 வாகனங்களுக்கான உரிமையை இதுவரை சபைக்கு எடுத்துக்கொள்ளாதிருந்ததால் அப்பெறுமதியினை கணக்கீட்டு முறைமைகள் மூலம் வெளிப்படுத்த வேண்டியிருந்தாலும் மோட்டார் வாகனம் மற்றும் வண்டிக் கணக்கின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ). 02 வைப்புக் கணக்குகளில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா. 4,816,852 வங்கி வைப்புகள் நிலையான வைப்புகளின் கீழ் நிதிச் சுற்றுகளில் காட்டப்பட்டிருந்தது.

(ஊ). 06 துருவ மசோதாக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த தொகைக்காக பெறவேண்டிய வருடாந்த வட்டி ரூபா. 114,336 குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) வழங்கப்பட்டிருந்த தகவல்களுக்கமைய வருடத்தின் வீதவரி சீட்டையிடப்பட்ட ரூபா.264,166,704 ஆன போதும் அது ரூபா. 264,039,607 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டினுள் கொள்முதல் செய்யப்பட்ட இயந்திர உபகரணங்கள் மற்றும் பலகையிலான பொருட்கள் மற்றும் பொருத்துதல்களுக்கான ரூபா.236,575 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) 2014 ஆம் வருடத்தில் களஞ்சியசாலைக்கு பெற்றிருந்த ரூபாய். 776,235 மதிப்புடைய 55 இயந்திர உபகரண விடயங்கள் மற்றும் ரூபா. 135,545 பெறுமதியுடைய பலகைப் பொருட்கள் மற்றும் 812 பொறுத்தும் உபகரணங்களுக்காக மீளாய்வாண்டின் கொள்முதல் செய்யப்பட்டதாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டினுள் ஒப்பந்தம் செய்யப்படாத கூட்டுத்தொகையான ரூபாய். 2,933,361 ஆன 11 செயற்திட்டங்களுக்கான பெறுமதி கடன் கொடுத்தோர் கணக்கின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஓ) தற்பொழுது 05 வருடங்களுக்கு மேலிருந்து நகர சபை வாகன தரிப்பிடத்தின் வருமானம் ரூபா. 200,567,833 பெறவேண்டியிருந்ததோடு இது சம்பந்தமாக நீதிமன்றத்தின் தீர்ப்பின் கீழ் மத்தியஸ்தம் குழுவினால் விசாரிக்கப்படுகின்ற வழக்கு சம்பந்தமான கணக்கீடுகள் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஔ) மீளாய்வாண்டின் போது கொள்முதல் செய்யப்பட்ட மற்றும் நன்கொடையாக பெற்றிருந்த ரூபா. 1,265,604 பெறுமதியான நுலகப் புத்தகங்கள், பலகையாலான பொருட்கள் மற்றும் இணைப்புகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஃ) 2013 செப்டெம்பர் முதல் 2015 செப்டெம்பர் வரையிலான காலப்பகுதிக்காக பெறவேண்டியிருந்த வாடகை ரூபா. 3,587,482 மேலும் கடன் கேட்போரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(க) வீட்டு வாடகை வைப்புக் கணக்கில் 03 வைப்புகள் சமநிலைப்படுத்தும் போது ரூபா. 116,840 குறைவாக சமநிலைப்படுத்தப்பட்டிருந்தது.

1.3.2 <u>ஒப்பீடு செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

அ. 06 கணக்கு விடயங்களுக்கான கட்டுப்பாட்டு கணக்குகளுக்கமைய மிகுதிகளின் கூட்டுத்தொகை ரூபா. 201,311,596 ஆனதோடு துணை ஆவனங்களுக்கமைய அம்மிகுதிகளின் கூட்டுத்தொனை ரூபா. 204,376,111 ஆகக் காணப்பட்டதால் ரூபா. 3,064,515 ஆக வேறுபாடொன்று காணப்பட்டது.

ஆ. அசையாச் சொத்துக்களின் ஆவணத்திற்கமைய ரூபா. 462,211,061 ஆன மோட்டார் வண்டி மற்றும் வண்டிகளின் பெறுமதி நிதிச்சுற்றுகளில் ரூபா. 436,444,144 ஆகக் காட்டப்பட்டிருந்ததால் ரூபா. 25,766,917 ஒப்பிடப்பபடாமை ஒன்று காணப்பட்டது.

இ. மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் 03 வருமான விடயங்களின் கூட்டு நிலுவை ரூபா. 103,216,145 ஆன போதும் கணக்கீடுகளின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி அம்மிகுதி ரூபா. 99,442,400 ஆக ஆனதால், ரூபா. 3,773,745 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

1.3.3 <u>உறுதியற்ற கணக்குகள்</u>

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுகளின் முன் பெற்றுக்கொள்ளப்பட்டவையின் கீழ் காணப்பட்ட ரூபா. 24,153,371 உறுதியற்ற கணக்கின் மிகுதியை தெரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

1.3.4 <u>பெற வேண்டிய கணக்குகள்</u>

பெறவேண்டியிருந்த 14 கணக்கு மிகுதிகளின் கூட்டுத்தொகையின் பெறுமதி ரூபா. 589,785,342 ஆனதோடு, அதில் 01 வருட காலத்தில் மிஞ்சியிருந்த கணக்கு மிகுதிகளின் கூட்டுத்தொகை ரூபா. 464,575,351 ஆகக் காணப்பட்டது.

1.3.5 <u>செலுத்த வேண்டிய கணக்குகள்</u>

2015 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா. 318,775,722 ஆக செலுத்தவேண்டிய 03 கணக்கு விடயங்களின் கூட்டுப் பெறுமதி ரூபா. 256,339,313 ஆன செலவு கடன் கொடுத்தோர்கள் ஆனதோடு அதில் 01 வருட காலத்தில் மிஞ்சியிருந்த கணக்கு மிகுதிகளின் கூட்டுத்தொகை ரூபா. 147,788,019 ஆக இருந்தது. 2016 ஆகஸ்ட் 10 ஆம் திகதிக்கு மிகுதி ரூபா. 111,053,306 ஆனதாக நகர ஆணையாளர் மூலம் என்னிடம் கூறப்பட்டிருந்தது.

1.3.6 <u>கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை</u>

06 கணக்கீடு விடயங்கள் தொடர்பாக தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபாய். 133,568,551 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

1.3.7 <u>சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்.</u>

பின்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள் <u>பிரமாணங்களுடன் தொடர்பு</u> | இணக்கமின்மை |
|---|---|
| அ. மாநகர சபை சட்டம் | |
| பிரிவு 127 (3) | அனுகூல சான்றிதழ் பெறாமல் வீடொன்றிற்கு குடியேறுபவர்களிடம் ஒரு நாளுக்கு ரூபா. 250.கூடாதவாறு தண்டப்பணம்அரவிடப்பட வேண்டியிருந்தாலும் மாதிரியாக இனங்காணப்பட்ட காலதாமதமாக அளிக்கபட்ட 15 அனுமதிப்பத்திரங்கள் சம்பந்தமாக ரூபா. 1,734,500 தண்டப்பணம் அரவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

(ஆ) இலங்கைக் குடியரசின் அலுவலக சட்டம் - 2013 xix ஆன பரிட்சை 6:1, 6.2 பந்தி

சபைக்குச் சொந்தமான 10 அரசாங்க விடுதிகளில் குடியேறுவதற்காக 1983 வருடத்தில் 10 அதிகாரிகளுக்கு 05 வருட காலத்திற்காக வழங்கியிருந்ததோடு 2015 ஜீன் 30 ஓய்வு பெற்று பல வருடங்கள் ஆன போதும் அவ்விடுதிகளின் உரிமை மீள் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இவ்விடுதிகளின் இடையிடையே வாடகை அரவிடப்பட்டாலும் மீளாய்வாண்டின் இறுதி திகதியாகும் போது ரூபா 633,336 வீட்டு வாடகை நிலுவையாகக் காணப்பட்டது.

(இ)2003 எப்ரல் 11 ஆம் திகதி/ சீபீசீ/06/06/02 இலக்க மம்திய மாகான தலைமை அமச்சிநது சுற்றறிக்கை கடிதம்

பினைவைப்பு செய்வ வேன்டிய 109 போடில் இருந்து பினை பணம்மாக 284,000 பெர வேனடிதக்கான நடவடிக்கை அரிவிக்க விலலை

(ஈ) 2011 ஒக்டோபர் 01 ஆம் இலக்க 2/2011 சுற்றறிக்கை 4.1 பரீட்சை

கூடிய பிரதிலாபம் அடைவோருக்கு பிரயோசனமானதிட்டங்கள் முன்னுரிமை அளிக்க வேண்டியிருந்தாலும் குடும்பங்கள் 05 இற்கும் குறைவான தொழில்கள் 04ற்காக ரூபா 2,124,436 சபை பணத்தின் மூலம் செலவழிக்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதி கூற்றக்களின் பிரகாரம் 2015 டிசம்பர் 31ம் திகதியில் முடிவடைந்த ஆண்டின் பொது சபையின் மீண்டு வரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா. 385,165,618 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டு வரும் செலவு விஞ்சிய வருமானம் ரூபா. 347,248,051 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளின் ரூபா. 37,917,567 கான முன்னேற்றம் ஒன்று காணப்பட்டது.

2.2 <u>பகுப்பாய்வு நிதி மீளாய்வு</u>

மீளாய்வாண்டின் மொத்த அதிகம் கடந்த வருடத்தின் மொத்த அதிகத்துடன் ஒப்பிடுகையில் ரூபா. 118,983,503 அதிகத்தில் உயர்வொன்று காணப்பட்டதுடன் அதற்காக 2015 வருடத்தின் 04 வரவு விடயங்களின் வரவு உயர்ந்து மற்றும் மீண்டுவரும் 03 செலவு விடயங்களில் செலவுகள் குறைந்து காணப்பட்டது.

2.3 <u>வருமானம் நிர்வாகம்</u>

2.3.1 <u>வருமானங்களை சேகரிக்கும் செயற்திறன்</u>

செயலாளர் மூலம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய வருடத்திற்கு ஒப்பியவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்கிடப்பட்ட வருமானம் மெய் வருமானம் மற்றும் நிலுவை வருமானத்திற்கான விடயங்கள் பற்றிய பின்வரும் விடயங்கள் காணப்பட்டது.

| | 2015-01-01 ற்கான நிலுவை | வருடத்தின் சீட்டையிடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | | 2015-12-31 திகதிக்கு சேர்க்க வேண்டிய மொத்த தொகை |
|---|---|---|---|---|---|
| | | | 2015-01-01 திகதிக்கு நிலுவையினால் சேர்க்கபட்ட வருமானம் | 2015வருடத்தில் சீட்டையிடப்பட்டவையால் சேர்க்கபட்ட வருமானம் | |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீத வரி | 145,611,674 | 264,166,705 | 82,275,688 | 225,580,659 | 101,922,032 |
| வாடகை வருமானம் | 101,080,288 | 65,123,613 | 17,379,345 | 40,616,162 | 105,943,556 |
| அனுமதிபத்திர தொகை | - | 27,411,245 | - | 27,411,245 | - |
| ஏனைய வருமானங்கள் | 481,158,066 | 763,815,612 | 242,880,051 | 539,911,791 | 462,196,788 |
| மொத்தம் | | | | | **<u>670,062,376</u>** |

மேல் காணப்பட்ட வருமான விடயங்களின் மீளாய்வாண்டின் இறுதித் திகதிக்கு ரூபா. 670,062,376 ற்கான நிலுவை காணப்பட்டது.

2.3.2 <u>வீத வரி</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

அ. மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா. 145,611,474 ற்கான நிலுவையொன்று காணப்பட்டதுடன் வருடத்தில் சீட்டையிடப்பட்டவை ரூபா. 264,166,705 ஆக இருந்தது. வருடத்தில் மீள் பெறப்பட்டவை நிலுவையிலிருந்து நூற்றிற்கு 57 மற்றும் சீட்டையிடப்பட்டவையினால் நூற்றிற்கு 72 ஆகும். 2015 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா. 101,922,031 அளவிலான நிலுவை அரவிட

வேண்டியிருந்ததுடன் அது சம்பந்தமாக மாநகர சபை விதிக்கோவை 242 இல் உள்ளவாறு சட்டங்களுக்கமைய நிலுவை தொகையை அரவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

ஆ. மாநகர சபையினால் மதிப்பீட்டு அலுவலகத்திற்கு சரியான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் மற்றும் சரியான திட்டமிடல் இன்றி கவனம் இன்மையால் செயற்பட்டு 2002 ஆம் வருடத்திலிருந்து தொடர்ச்சியாக ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனத்திற்காக வீத வரி அதிமதிப்பீடு செய்யப்பட்டிருந்ததால் 2008 ஆம் வருடத்தில் மாநகர சபைக்கு எதிராக ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனம் வழக்குத்தாக்கல் செய்திருந்தது. வீத வரி அதிமதிப்பீடு செய்யப்பட்டிருப்பதாக நீதி மன்றம் தீர்ப்பளித்த பின் அவ்வலுவலகம் செலுத்தாதிருந்த ஆனாலும் நிலுவையாக காட்டப்பட்டிருந்த வரி ரூபா. 25,852,737 தொகையொன்று மீளாய்வாண்டின் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. இவ்விடயங்கள் கணக்குகளின் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

இ. 2013, 2014 மற்றும் 2015 வருடங்கள் வரிசையாக ரூபா. மில்லியன் 114 ரூபா மில்லியன் 146 மற்றும் ரூபா மில்லியன் 102 ற்கான வீதவரி நிலுவை காணப்பட்டதோடு 1984 நவம்பர் 20 ஆம் திகதி இலக்க 1984/19 ஆம் சுற்று 8.1 பரீட்சையில் காணப்படுகின்ற சட்டங்களுக்கு இனங்காத வகையில் செயற்புரிந்த பிடியாணை வழங்கியதன் பின்னால் அரவிடப்படுகின்ற தொகை மற்றும் அது தொகையான தொகைகளில் கூட்டுப்பெறுமதியிலிருந்து நூற்றிற்கு 03 கொமிஸ் தொகையாக 2013,2014,2015 தொகை 03 மாதங்களுக்கு 01 முறையாக சபையின் அதிகாரிகளுக்கு மற்றும் சேவகர்களுக்கு ரூபா. 4,685,611 ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டிருந்தது.

2.3.3 <u>வாடகை வரி</u>

அ. மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா. 101,080,288 நிலுவை காணப்பட்டதுடன் வருடத்தின் சீட்டையிடப்பட்டவை ரூபா. 65,123,613 ஆகும். வருடத்தில் அரவிடப்பட்ட நிலுவையிலிருந்து நூற்றிற்கு 17 மற்றும் சீட்டையிடப்பட்டவையினால் நூற்றிற்கு 62 ஆகக் காணப்பட்டது. 2015 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா. 105,943,556 ற்கான மிகுதியொன்று மேலும் அரவிடப்பட வேண்டியிருந்ததுடன் வரி மீள் அரவிடுவது பலவீனமான நிலையில் காணப்பட்டது.

ஆ. வருட 01 – 29 ஆனக் காலப்பகுதியில் 263 தொழிலாளர் குடியிருப்புகளிடம் அரவிடப்படவேண்டிய ரூபா. 1,202,617 ற்கான நிலுவை இருப்பிட வாடகை வரி மீள் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இ. எஸ். டப்ளிவ். ஆர். டீ. பண்டாரநாயக்க மாவத்தை (புகையிரதப் பாதை) அமைந்திருந்த மாநகர சபைக்குச் சொந்தமான 130 கடையறைகளிலிருந்து 107 கடைகளுக்கான சட்டங்கள் பிரகாரம் ஒப்பந்தத்திற்கு வராமல் வாடகைக்கு விடப்பட்டிருந்ததுடன் அதில் 87 கடைகளிடமிருந்து அரவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா. 24,408,500 தொகையை மீளாய்வாண்டு வருட 1 ½ மேற்பட்ட காலப்பகுதியில் கூட அரவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் மாதாந்த கடை வாடகை உயர்வரி மற்றும் சேர்க்கப்பட்ட தொகையின் கீழ் வரி உள்ளடங்களாக ரூபா. 2,803,297 தொகையை அரவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஈ. 1980 டிசம்பர் 31 ஆம் திகதி 1980/ 46 ஆம் இலக்கத்திற்காக மாகாண நிறுவான ஆணையாளரின் சுற்று 2 ஆம் பரீட்சையின் பிரகாரம் மெனிக்கும்புர கிழக்கு 14/ 157 ற்கான கடை 2002 மார்ச் 08 திகதி 05 வருடத்திற்கான வாடகையாளர் ஒருவருக்கு ஒப்பந்தம் மூலம் கொடுக்கப்பட்டிருந்தது. 05 வருடங்களின் பின் வாடகை வரி திருத்தம் செய்து மீண்டும் ஒப்பந்தம் செய்யப்பட வேண்டியிருந்தாலும் வாடகை ஒப்பந்தம்

முடிவடைந்து 09 வருடகாலமானபோதும் வாடகை வரி மீள் ஒப்பந்தம் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

கடையறைகள் மீள் வாடகைக்கு விடப்பட்டிருக்கும் போது வாடகையாளரின் அனுமதிப்பத்திரம் இரத்து செய்யவேண்டியானாலும் அதற்கு முரணாக செயற்பட்ட வாடகையாளர்கள் சம்பந்தமான சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.3.4 <u>நீர் கட்டணம்</u>

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா. 91,085,736 ற்கான நிலுவையொன்று காணப்பட்டதுடன் வருடத்தின் சீட்டையிட்டவை ரூபா. 503, 233,797 ஆக காணப்பட்டது. வருடத்தில் அரவிடப்பட்ட நிலுவையிலிருந்து நூற்றிற்கு 76 மற்றும் சீட்டையிடப்பட்டவை நூற்றிற்கு 82 ஆக இருந்ததோடு 2015 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா. 104,022,946 ற்கான நிலுவை நீர்கட்டணமொன்று மேலும் அரவிடப்படவேண்டியிருந்தது.

2.3.5 <u>நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைகள்</u>

2015 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நீதிமன்ற தண்டப்பணம் ரூபா. 3,078,893 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா. 113, 529,139 அரவிடப்படவேண்டியிருந்தது.

2.3.6 <u>நில வரி</u>

2013 ஜுலை 11 ஆம் திகதி2013/06 ஆம் இலக்க சுற்றில் 3.1 பரீட்சையில் சட்டங்களுக்கு அமைவாக வாடகை விடப்பட்ட 30 வருடங்கள் கடந்திருந்த இடங்களுக்காக திருத்தத்தை செய்து வரி அரவிடுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதிகூடிய வரி 30 வருட காலத்தை கடந்திருந்த வரியாளர்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

2.4 <u>வங்கி ஒப்புதல்</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

01. வங்கி 02 நடைமுறை கணக்குகளுக்கான 20015 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு வெளியீடு செய்யப்பட்ட போது செலுத்தப்படாத 06மாத காலம் மிஞ்சிய ரூபா. 632,291 மதிப்புள்ள 52 காசோலை சம்பந்தமான 2016 ஏப்ரல் 30ஆம் திகதி வரையிலும் காசு விதிக்கோவை சம்பந்தமான 396 (ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.
02. இரண்டு வங்கிக் கணக்குகளுக்கான 2015 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான கூட்டுத்தொகை ரூபா. 3,049,402 மதிப்புடைய 113 காசோலைகள் 2016 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் சேராமல் இருந்தது.

03. 02 வங்கிகணக்கிற்கான 2015 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு பற்று மிகுதிகளின் பெறுமதி ரூபா. 8,116,890 ஆகக் காணப்பட்டதோடு 2016 ஏப்ரல் 30 ஆம் திகதி ஆகும் போது தெரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

04. 02 வங்கிக் கணக்குகள் 2015 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு இனங்காணப்படாத வரவு மிகுதிகளின் பெறுமதி ரூபா. 1,175,628 ஆகக் காணப்பட்டதுடன் அம்மிகுதிகளின் 2016 ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு இனங்காணப்பட்டு தெரிவுபடுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

3. <u>செயற்பாட்டு மீளாய்வு</u>

3.1 செயற்திறன் மதிப்பீடு

--------------------------------

மீளாய்வாண்டினுள் சபை நிதி பயன்படுத்தி 471 அபிவிருத்தித் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு ரூபா. 496,665, 173 ற்கான தொகை திட்டமிடப்பட்டு மதிப்பீடு செய்யப்படவில்லை. திட்டங்களை செயற்படுத்தும் போது திட்டமிடுதல் கண்காணிப்பு மற்றும் சரியான முகாமைத்துவம் இல்லாத காரணத்தால் ரூபா. 10,870,362 மதிப்பீட்டு பெறுமதியான 34 திட்டங்கள் செயற்படாமல் நீக்கப்பட்டு இருந்ததோடு ரூபா. 52,720,893 மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியுடன் 65 திட்டங்கள் 2015 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிறைவேற்ற முடியாமல் அடுத்த வருடம் செய்வதற்காக பிற்போடப்பட்டிருந்தது. அதற்கமைய முழு மதிப்பீட்டின் நூற்றிற்கு 21 வரை செயற்பாட்டிலிருந்து விலகிக் காணப்பட்டது.

3.2 <u>செயற்பாட்டுத் திறமையின்மை</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

3.2.1 <u>வாடகை வீட்டு மன்றத்தின் வைப்புகள்</u>

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் வாடகை வீட்டு மன்றத்தின் வைப்புகள் 25,062,878 ற்கான நிலுவை காணப்பட்டது. 37 வருடங்களுக்கு கொண்டு செல்லப்பட்ட நிலுவை சம்பந்தமானவர்கள் உயிருடன் இருக்கிரார்களா இல்லையா என பரிசோதித்து தெரிவுபடுத்த முடியும் நிலுவைகளை நடவடிக்கை எடுக்காமல் கணக்குகளில் முன் கொண்டுவரப்பட்டுக்கொண்டிருந்தது.

3.2.2 <u>தொழிலாளர் கடன்கள்</u>

அ. மீளாய்வாண்டின் போது இறுதியாக இறந்தவர்கள் ஓய்வு பெற்றவர்கள் வேளையை விட்டுச் சென்றவர்கள், வேலை தடை செய்யப்பட்டவர்கள் மற்றும் இடமாற்றமடைந்த அதிகாரிகள் 185 பேர்களில் 01 வருடத்திலிருந்து 11 வருடங்களை மிஞ்சிய காலப்பகுதியில் அரவிடப்படவேண்டியிருந்த ரூபா. 9,104,735 ஆன கடன் நிலுவையொன்று 2016 ஜுன் 15 ஆம் திகதியாகும் வரையிலும் அரவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஆ. இடமாற்றம் அடைந்த 20 அதிகாரிகளின் கடன் நிலுவை தெளிவுபடுத்துவதில் ரூபா. 36,594 அதிகமாக அரவிடப்பட இருந்தது.

இ. 2004 வருடத்திவ் சுனாமி தாக்கத்தின் போது காணாமல் சென்ற அதிகாரி ஒருவரிடம் அரவிடப்பட வேண்டிய ரூபா. 67,296 கடன் நிலுவை 11 ஆண்டுகள் கடந்தபோதிலும் தெளிவுபடுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஈ. 1995 ஆம் வருடத்தின் இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான 34 பேர்களிடம் அரவிடப்பட வேண்டிய 77,261 கடன் நிலுவை மற்றும் 30 அதிகாரிகளிடம் அறவிடும் போது கூடுதலாக அறவிடப்பட்டிருந்த ரூபா. 122,503 வானது 20 வருட காலமாக தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

3.2.3 <u>மின்சார சபைக்கு கொடுக்கப்பட்டிருந்த கடன் கொடுத்தோர் மற்றும் கடன் வாங்கியோர் நிலுவை</u>

1995 வருடத்தில் மாநகர சபையின் மின்சார பிரிவு இலங்கை மின்சார சபைக்கு வழங்கும் போது இருந்த ரூபா. 43,599,525 ற்கான கடன் வாங்கியோர்களின் நிலுவையும் ரூபா. 50,443,103 கடன் கொடுத்தோரின் நிலுவையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2.4 <u>அசையா சொத்துக்களின் ஆவனம்</u>

சபைக்கு சொந்தமான ரூபா. 880,086,643 மதிப்புடைய 34 வாகனங்கள் ஆவணத்தில் உள்ளிடப்பட்டிருக்கவில்லை.

3.2.5 <u>பட்டியலிடப்படாத பொருட்கள்</u>

2015 வருடத்தின் விலைக்கு வாங்கப்பட்ட ரூபா. 2,400,812 மதிப்புள்ள பலகையினாலான பொருள் விடயங்கள் 1615 க்கு மற்றும் ரூபா. 1,801,400 மதிப்புள்ள இயந்திர உபகரண விடயங்கள் 97 சரக்கு ஆவணங்களில் அடங்கவில்லை.

3.3 <u>நிருவாக திறமையின்மை</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

3.3.1 இடங்கள் வாடகைக்கு விடுதல்

அ. இடங்கள் வாடகைக்கு விடும்போது மாநகர சபை விதிக்கோவை (252 அதிகாரத்தின்) 36 (I) (III) மற்றும் 40 (ஊ) பந்தியின் பிரகாரம் ஜனாதிபதியின் எழுத்துமூல ஒப்புதல் மற்றும் 2013 ஜுலை 11 ஆம் திகதி 2013/06 ஆம் இலக்க மாகாண ஆணையாளரின் சுற்றரிக்கை 6.5 பரீட்சையின் பிரகாரம் விடயம் சம்பந்தமான அமைச்சரின் அனுமதி பெறவேண்டியிருந்தாலும் அவ்வாறு அனுமதியின்றி வாடகைக்கு விடப்பட்டிருந்தது.

ஆ. மேல் காணப்பட்ட சுற்றரிக்கை 6.3 பரீட்சையின் பிரகாரம் இடங்கள் வாடகைக்கு விடும் போது வாடகையாளரும் மிகைஒப்ப இட்ட மாநகர சபை மூலம் அளிக்கப்பட்ட ஒப்பந்தத்தினால் மட்டும் வாடகை அளிக்க வேண்டும் ஆயினும் அவ்வித ஒப்பந்தங்கள் இன்றி இடங்கள் வாடகைக்கு அளிக்கப்பட்டிருந்ததைக் காணமுடிந்தது.

இ. மாநகர சபை மூலம் சரியான காலத்தில் இட மதிப்பீட்டு அறிக்கையைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்காததற்கு அமைய வாடகைக்கு விடப்பட்டிருந்த பல்வேறு நிலங்களாகப் பெற வேண்டியிருந்த வருடாந்த வாடகைத் தொகை ரூபா. 80 மற்றும் ரூபா. 900 இடையில் காணப்பட்டது. ஆனால் நகரத்தின் தற்போதைய கணக்குகளிடம் ஒப்பிடுகையில் மாநகர சபை மூலம் அறவிடும் வாடகை தொகை மிகக் குறைந்த நிலையில் காணப்பட்டதோடு இக்காரணமாக நகர சபைக்கு அறவிடவேண்டியிருந்த வறுமானம் கிடைக்காமலிருந்தது.

ஈ. மாநகர சபை மூலம் நிலம் வாடகைக்கு விடப்பட்ட வாடகையாளர்களின் விபரங்கள் சேர்க்கப்பட்ட நிலவாடகை பத்திரம் ஒன்று நில பிரிவு மூலமாக நடாத்தி வரப்பட்டிருந்தாலும் இவ்வாவணம் 2012 ன் பின் மேம்படுத்தப்படவில்லை. இடைநடுவே செய்த பரிசோதனையின் போது 11 வாடகையாளர்களின் பெயர்கள் சேர்க்கபட்டிருக்கவில்லை.

3.3.2 <u>சம்பத் பியச மத்திய நிலையம்</u>

அ. மாநகரசபை மூலம் சேர்க்கப்படுகின்ற உக்காத குப்பைகளை மீள் விநியோகம் செய்யும் போது இரசீது வழங்கப்படாமல் தொகை அரவிடப்பட்டிருந்தது. 2015 ஒக்டோபர் 06 ஆம் திகதி காலியான கண்ணாடி போத்தல் விற்பனையின் போது பெற்றிருந்த ரூபா. 10,000 முன்பணத்திற்கான இரசீது வெளியிட்டிருக்காததோடு அதை சபைப் புத்தகத்திலோ வேறு ஆவணங்களிலோ பதிவு செய்யப்படவில்லை.

ஆ. சம்பத் பியஸ மத்திய நிலையத்தின் உக்காத குப்பைகள் சேர்க்கும் போது மற்றும் விநியோகம் செய்யும் போதும் பொறுப்பான வேலைப்பார்க்கும் அதிகாரியின் கருத்துக்கமைய வாங்குதல் மற்றும் விற்பனைக்கான விலை தீர்மானிக்கப்பட்டிருந்ததோடு அதற்கான மேற்பார்வை அதிகாரி ஒருவரிடம் அனுமதி பெறுவதற்காக விதிமுறை எடுக்கப்படவில்லை.

3.3.3 <u>மஹாயாவ மாடிக்கட்டிட வீட்டுத் திட்டம்</u>
பின்வரும் விடயங்கள் அவதானிக்கபட்டன.

அ. மாநகரசபைக்கு சொந்தமான மஹாயாவ பிரதேசத்தின் பூமியொன்றில் அனுமதியின்றி குடிப்பெயர்ந்திருந்த குறைந்த வருமானம் கொண்ட ஆட்களுக்கான வீடு அபிவிருத்தி அதிகாரசபையுடன் ஒன்றிணைந்து 200 வீடுகள் உள்ளடங்கிய மாடிவீட்டுத் தொகுதியொன்று நிர்மானிக்க 1999 ஆம் வருடத்தில் திட்டமிடப்பட்டிருந்தது. இதற்காக மாநகர சபைக்குச் சொந்தமான இடமொன்று தற்காலிகமாக வீடு அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றும் இனங்கத்திற்கமைய மற்றும் வீடு அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் மாநகர சபைக்கு நிதி ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளும் அடிப்படையின் கீழ் 200 வீடுகள் கட்டுவது ஆரம்பித்திருந்ததோடு மாநகர சபையின் மூலம் மேல் குறிப்பிடப்பட்ட இடம் வீடு அபிவிருத்தி அதிகாரிக்கு மாற்றிக்கொடுக்காததால் அத்திட்டத்தை இடைநிறுத்தி நிர்மானிக்கப்பட்டிருந்த மாநகர சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. நிர்மானிக்கப்பட்ட வீடுகளுக்காக ரூபா. 20,000,000 தொகை 32 வீடு அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தும்படி மாநகர சபையின் மூலம் தொடர்ச்சியாக அறிவித்த போதும் அப்பணத்தை செலுத்துவதற்கோ அல்லது அது சம்பந்தமாக விசாரித்து சரியான ஒப்பந்தத்திற்கு வருவதற்கு 2016 ஜுன் 30 ஆம் திகதி வரையிலும் சபை எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

ஆ. வீடு அபிவிருத்தி அதிகார சபைக்குச் செலுத்த வேண்டிய ரூபா. 20,000,000 தொகையை கணக்குகளில் வெளிக்காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

இ. இவ்வீட்டுத் திட்டம் நிர்மானிக்கும் போது வீடு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் சபை சட்டபூர்வமான ஒப்பந்தத்திற்கு வந்திருக்கவில்லை.

ஈ. நிர்மானிக்கப்பட்டிருந்த 32 வீடுகள் சட்டபூர்வமாக உரிமையாளர்களிடம் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் அனுமதியின்றி குடியேறுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. இவ்வீடுகள் தற்பொழுது வீட்டு உரிமையாளர்கள் வேறு நபர்களுக்கு விற்பனை செய்திருப்பதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றிருக்கின்றது.

உ. மேல்வரும் 32 வீடுகளுக்கான வீடு அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய ரூபாய். 20,000,000 தொகையை செலுத்துவதற்காக வீட்டு உரிமையாளர்களிடமிருந்து 30 வருட காலத்திற்குள் மாதாந்தம் 1000 ரூபாவாக அரவிடுவதற்கு திட்டமிட்டிருந்தாலும் அத்தொகையை அரவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கப்படாததோடு அவ்வீடுகளின் குடியிருப்போர்களிடமிருந்து வாடகை அரவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

3.3.4 நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதி

1987 செப்டம்பர் 30 ஆந் திகதிக்கான 8 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவரின் சுற்றின் 02 ஆம் பரீட்சையின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகாரசபை வங்கிக் கணக்கின் தொகை அவ்வதிகாரசபையின் முன்குட்டி உள்ளூராற்சி நிறுவனதில் ஆரம்பிப்பதற்கு யோசணை செய்யப்பட்ட அபிவிருத்தி திட்டத்திற்காக செலவழிக்க இயலுமான போதும் அந்நிதியை எதுவித அபிவிருத்தித் திட்டங்களுக்காகவும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. மீளாய்வாண்டின் இறுதித் திகதிக்கு அத் தொகையின் நிலுவை ரூபா. 49,166,414 ஆகக் காணப்பட்டது.

3.3.5 உலக பாரம்பரிய நகர நிதி

அ. கண்டி உலக பாரம்பரிய நகரத்தின் அபிவிருத்தி, தொல்பொருள், கலாச்சார மற்றும் அழகியற் பாதுகாப்பு நோக்கங்களை செயற்படுத்துவதற்காக அமைக்கப்பட்டிருந்த நிதியில் மீளாய்வாண்டின் இறுதிக்கு ரூபா. 3,118,249 நிலுவையொன்று காணப்பட்டதுடன் 2015 ஆம் வருடத்தின் அவதானிக்கப்பட வேண்டிய விஷேட திட்டங்கள் ஆரம்பித்திருக்காததால் நிதி வேளையற்றுக் காணப்பட்டது.

ஆ. உலக பாரம்பரிய இணையத்தளத்திற்காக அதன் நிர்மானிப்பாளருக்காக நிர்மானிப்பதற்காக 02 வருட பராமரிப்புக் காலத்திற்காக ரூபா. 35,000 செலுத்தப்பட்டிருந்ததுடன் 2016 ஜுன் ஆகும் போதும் அவ் இணையத்தளம் இயங்காதிருந்தது.

3.4 கருத்து வேறுபாடுகளுக்கான கொடுக்கல் வாங்கல்

ஆயர்வேத கலவையாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த போது அப்பதவிக்காக விண்ணப்பம் கோராத நேர்முகத்தேர்விற்காக 06 நபர்கள் சேர்க்கப்படும் செயன்முறைக்கு இனங்காமல் 2014 ஒக்டோபர் 15 ஆம் திகதிக்கு ஆயர்வேத கலவையாளர் பதவிக்கு நியமனம் கொடுக்கப்பட்டு அந்நாளிலிருந்து 2015 டிசம்பர் 31 ஆம் திகதிவரை ரூபா. 2,638,916 சம்பளம் மற்றும் ஊக்கத் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

3.5 மேற்காணப்பட்ட நட்டம்

CP – LH – 9537 இலக்கத்தினையுடைய கம்பெக்டர் வண்டி விபத்திற்குள்ளாகுதல்.

மாநகர சபையின் உக்காத குப்பை முகாமைத்துவப் பிரிவின் விசேட திட்டத்தின் கீழ் சேவையில் இடப்பட்டிருந்த CP – LH – 9537 இலக்கத்தினையுடைய கம்பெக்ட் வண்டி 2014 ஒக்டோபர் 11 ஆம் திகதி இரவு விபத்திற்குள்ளாகி மீள் புதுப்பிப்பதற்காக ரூபா. 250,000 தொகையை சபையினால் செலவழிக்கப்பட்டிருந்தது. 1 ½ வருடத்திற்கு கடந்திருந்த போது முதல் பரிசோதனை முடிவடைந்து பொறுப்புப் கூறியவர்களை இனங்காண்பதற்கு மற்றும் நட்டத்தை அரவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

3.6 ஒப்பந்த நிறுவாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

3.6.1 மாபனா வதுர லேடி மெனின் பாதையில் 53 ஆம் இலக்கம் அருகில் பாதுகாப்பு மதில் நிர்மானித்தல் - இரண்டாம் கட்டம் - ருபா. 916,000

மாநகர சபை நிதியின் கீழ் ரூபா. 916,000 மதிப்பீட்டின் கீழ் சி- ச கண்டி பல தொழில் சேவை மத்திய நிலைய சங்கத்திற்கு 2015 ஏப்ரல் 3 ஆம் திகதி நிர்மானிக்கப்பட்டு மாற்றம் செய்து

வேலை முடிவடைந்து ரூபா’ 916,000 செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தத்திற்கமைய தொழில் ஒப்படைக்கப்பட்டு 03 மாதம் செல்லும் வரையில் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரி மூலம் வழிநடாத்துவது செய்ய வேண்டுமானாலும் 02 மாதங்கள் கடக்கும் முன்பே 2015 ஜுன் 29 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்தது.

3.6.2 <u>கல்கந்த தோட்டப் பாதை தென்னகோன் அவர்களின் வீட்டின் முன்னால் உள்ள பாதை அபிவிருத்தி செய்தல் ரூபா. 185,000</u>

சபை நிதியின் கீழ் ரூபா 185,000 மதிப்பிட்டிற்கமைய வேவேல தோடம்வல கராம அபிவிருத்தி சங்கத்தில் 2015 மார்ச் 30 ஆம் திகதி நிர்மானிக்கப்பட்ட ஒப்படைத்த வேலை நிறைவு செய்த ரூபா. 185,000 செலுத்தப்பட்டு இருந்தது. மதிப்பீட்டில் மற்றும் ஆவனத்தில் கல்கந்த தோட்ட பாதையில் தென்னகோன் அவர்களின் வீட்டிற்கு செல்லும் பாதை அபிவிருத்தி செய்வதற்காக காசு பதிவு செய்து இருந்த போதும் ஒரு வீட்டிற்கு போகும் பாதை அவ்வீட்டு உரிமையாளரின் இடத்தில் பாதை தாழ்ந்து காணப்பட்ட பகுதிக்காக படிக்கட்டு அமைத்திருந்தது. 2015 செப்டெம்பர் 02 ஆம் திகதி செய்யப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது காணப்பட்டது.

3.6.3 <u>விஜேநாயக்க தோட்ட குறுக்குப் பாதை அபிவிருத்தி பராமரிப்பு செய்தல் ரூபா. 454,881</u>

200 மீட்டர் பகுதி நேர் (தொழிலாளர்கள்) தார் இடுவதற்காக நடவடிக்கை ஆரம்பித்து இருந்ததோடு 2015 செப்டெம்பர் 02 ஆம் திகதி இது சம்பந்தமாக பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

அ. பாதை அபிவிருத்திக்காக பயன்படுத்தியிருந்த ABC கலவையில் உலோகம் குறைவாகக் காணப்பட்டதோடு கற்தூளின் அளவு கற்கள் அளவுக்கு இருந்ததோடு கல்தூள் அளவு கற்கல் அளவுக்கு இரண்டு மடங்கு கூடியதாகக் காணப்பட்டது.

பராமரிப்பிற்கு நடவடிக்கைகளுக்காக உபயோகித்தபடியால் இருந்த 01 அங்குல சேர்ந்த உடையும் அலவிலான கிரானைட் அளவு தரம் குறைவான கற்கள் ஆனதோடு அக்கற்கனை ரோலர் மூலம் சமப்படுத்தப்பட்ட போது உடையும் நிலை காணப்பட்டது.

3.6.4 <u>வாரியபொல ஸ்ரீ சுமங்கல மாவத்தை இலக்க 29/04 அருகில் பாதுகாப்பு மதில் நிர்மானித்தல் 1 மற்றும் 2 ஆம் கட்டம் - 2015</u>

கண்டி மாவட்ட இடர் முகாமைத்துவ அலகு மற்றும் கண்டி மாநகர சபை நிதி உபயோகித்த ரூபா. 1,622,011 செலவு செய்த தனியாள் வீட்டின் பாதுகாப்பிற்காக பாதுகாப்பு மதில் நிர்மானிக்கப்பட்டு இறுப்பது 2015 செப்டெம்பர் 02 ஆம் திகதி செய்யப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது காணப்பட்டது.

3.6.5 <u>கண்டி மாநகர சபையின் நீர் விநியோகத் துறைக்கான கட்டிடமொன்று நிர்மானித்தல்.</u>

நீர் விநியோக துறைக்காக கட்டிடம் நிர்மானிப்பதற்காக மூபா. 82,300,350 பெறுமதி 2015 செப்டம்பர் 25 ஆம் திகதி தனியார் குத்தகைக்காரர்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

அ. இலங்கை குடியரசு மற்றும் 2003 செப்டம்டபர் 5 தின 1304/18 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி பத்திரத்தின் அனுமதி பெற்ற மற்றும் செயற்படுத்தப்பட்ட 1249 மற்றும் 2002 ஆம் ஆகஸ்ட் 09 ஆம் திகதிய வர்த்தமானி பத்திரத்தின் iv (அ) பகுதியில் இடப்பட்டிருந்த இடர்

அமைப்பு iii பகுதியில் 4 (ஆ) (i) பந்திக்கமைய ரூபா. 500,000 அல்லது அதற்கு குறைவான ஒப்பந்தங்கள் பதிவுஒப்பந்ததாரிகளிடமிருந்து விலை கோரப்பட இயலுமானாலும் ரூபா 97,258,259 மதிப்பீட்டுப் பெறுமதியுடைய மேற்காணப்பட்ட கட்டமைப்புக்காக பதிவு செய்த ஒப்பந்ததாரிகள் விலைக்கோரப்படுவதாக வெளியீடு செய்து அதற்கமைய ஒப்பந்ததாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது. அத்தோடு டென்டர் செயன்முறை மற்றும் டென்டர் விதிமுறை பற்றி பொருட்படுத்தாமல் நிர்மானப்பணி ஒப்படைக்கப்பட்டிருந்தது.

ஆ. இந்த டென்டருக்காக சமூகமளித்த அலுவலகங்களான மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திற்கு ஒருங்கிணைந்த மத்திய பொருயியல் சேவை அலுவலகம் மற்றும் அரசாங்க பொறியியலாளர் மாநகராட்சிக்கு விசாரித்து இணக்கத்திற்கு வருவது தேடிப்பார்ப்பதற்கு மதிப்பீட்டுக்குழு பரிந்துரை செய்திருந்தபோதும் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இ. நிர்மானப்பணி ஆரம்பித்திருக்க மேறகூறப்பட்ட நிர்மாணப்பணி சம்பந்தமாக 2016 பெப்ரவரி 3 மற்றும் 5 ஆகிய தினங்களில் செய்யப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. நிர்மானிக்கப்பட்டுக்கொண்டிருந்த கொங்கிரீற்றிற்கான மய்கா அளவு கூடிய ¾ கற்கள் சிப்ச் கலந்த நிலையில் மற்றும் தரம் குறைவான ¾ கற்கள் கொங்ரீட் கலவைக்காக பாவிக்கப்பட்டிருந்தது.

ii. உடைத்துப் பார்க்கும் போது சரிவர உறுதியாகி இறுக்காததோடு அவ் கொங்ரீற்றை சுலபமாக உடைந்து செல்லும் நிலமையில் காணப்பட்டது.

iii. பக்கச் சுவர் மற்றும் நிர்மானிக்கப்பட்டிருந்த கொங்க்ரீற் தூண் பாதம் நிர்மானிப்பதற்கு மண்ணுடன் சேர்ந்த மணல் பயன்படுத்தப்பட்டிருந்தது.

iv. அனுமதி மற்றும் சரியான ஆலோசனையின்றி பக்க சுவரில் இருபக்கம் பெரிய கற்பாறைகள் (Bounlders) செலுத்தப்பட்டிருந்தது.

v. வேலை இடத்திற்கான சரியான விபரத்தையுடைய வடிவமைப்புகளை (Design) ஒப்பந்ததாரி மூலம் நிர்மானிக்கப்பட்ட சபையின் பொறியியலாளருக்கு சமர்ப்பித்து அனுமதி பெற வேண்டியிறுந்தாலும் 2016 பெப்ரவரி 17 வரையிலும் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 3.6.7 <u>மாநகர சபை கட்டிடம் நிர்மானித்தல்</u>

ரூபா. 5,600,000 ற்கான மதிப்பீட்டுக்கமைய ரூபா. 4,921,336 தொகைக்கு தனியார் ஒப்பந்ததாரி ஒருவருக்கு 2012 செப்டம்பர் 18 ஆம் திகதி நிர்மானிப்பதற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. வேலை ஆரம்பித்ததன்பின் 2015 செப்டம்பர் 15 ஆம் திகதி ஆகும் போது ரூபா. 92,280,722 ஆன பொறியியலாளரின் மதிப்பீடு 06 இன் கீழ் 06 தருணங்களில் ரூபா. 89,342,796 தொகைக்கு ஒப்பந்தம் ஒப்படைக்கப்பட்ட நாள் ஆகும் போது ரூபா. 58,655,847 ற்காக செலுத்தப்பட்டிருந்தது.

இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

அ. முழு கட்டிடத்திற்காக ஒரே தடவையில் செலவு மதிப்பீடு தயார் செய்ததற்கமைய ஒவ்வொரு படியாக வேறு வேறாக மதிப்பீடு தயார் செய்ய வேண்டும் ஆனாலும் முழு செலவு மதிப்பீடு தயார் செய்யப்படாமல் ஒவ்வொரு படியாக இணங்கியவாறு மதிப்பீடு தயார் செய்த ஒப்பந்தம் ஒப்படைக்கும் விதி ஒன்று கடைபிடிக்கப்பட்டிருந்தது. இதற்கமைய 2015 செப்டெம்பர் 15 ஆம்

திகதியாகும் போது ரூபா. 92,280,722 ஆன கூட்டுப்பெறுமதிமிக்க சேர்ந்தவாறு பொறியியலாளர் மதிப்பீடு 06 தயார் செய்யப்பட்டிருந்தது.

ஆ. இலங்கை குடியரசின் 2003 செப்டெம்பர் 05 ஆம் திகதி 1304/ 18 ஆம் இலக்க கெசட் பத்திரத்தின் அனுமதி மற்றும் செயற்படுத்த இலக்க 1249 மற்றும் 2002 ஆகஸ்ட் 09 ஆம் திகததியின் கெசட் பத்திரத்தின் iv (அ) பகுதியில் அறிவிக்கப்பட்ட இடர் அமைப்பு iii பகுதி 4 (ஆ) (I) பந்திக்கமைய ரூபா. 500,000 அல்லது அதற்குக் குறைவான ஒப்பந்ததார்களிடமிருந்து விலைகள் கோறப்பட இயலும் ஆனாலும் ரூபா. 92,280,722 மதிப்பீட்டுப் பெறுமதியுடன் கூடிய பின்வரும் கட்டமைப்புக்களை பதிவுஒப்பந்ததாரர்களிடமிருந்து விலை கோரப்படுவதாக வெளியீடு செய்யப்பட்டு அதற்கமைய ஓப்பந்ததாரர்கள் வெளியிட தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது. அத்தோடு செயல்முறை மற்றும் டென்டர் விதிமுறைகளை சரிவர பொ பொறுட்படுத்தாமல் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இ. நகர சபையில் தகுதியுடைய பொறியியலாளர் தொழிநுட்பங்கள் மற்றும் நிர்மானதாரர்கள் இருந்தபோதும் சரியான திட்டம் திறன் கற்றல் மற்றும் அமைவிடத்தின் பரிசோதனை செய்தல் ஆகியவற்றை செயற்படுத்தாமல் முறையற்ற வகையில் டென்டர் குறிப்பிட்ட நிர்மானப்பணிகளை ஆரம்பித்த பின் பூமியில் மண் பற்றிய பிரச்சினை காணப்பட்டது. அமைவிடத் மண்ணை பற்றி பேராதெனிய பல்கலைக்கழகம் மூலம் கொடுக்கப்பட்ட அறிக்கையின் பின் திட்டம் மற்றும் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா. 4,566,894 ற்கு புதிய பொறியியலாளர் மதிப்பீடு தயார் செய்து முன் ஒப்பந்தமிட்ட ஒப்பந்ததாரிகளுடன் 2013 ஏப்ரல் 03 ஆம் திகதி புதிய ஒப்பந்தப்பத்திரங்கள் வரப்பட்ட இருந்தது. அத்தோடு 2012 செப்டெம்பர் 18 ஆம் திகதி ஏற்படுத்தி இறுந்த ஒப்பந்தம் ரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஈ. ஆமைவிட அடித்தளம் வெட்டுவதற்காக கண மீட்டர் 1ற்காக ரூபா. 700 மதிப்பீடு செய்யப்பட்டிருந்தாலும் ஒப்பந்ததாரி அதற்காக கோரப்பட்டிருந்த விலை ரூபா. 250. அவ்வாறு இருந்த போது 04 வேலை விடயங்களின் கீழ் கீழ்மாடி அத்திவாரம் வெட்டுவதற்காக புதிதாக சேர்க்கப்பட்ட கண மீட்டர் 1300ற்காக 1 கண மீட்டருக்கு ரூபா. 625 மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததால் கண மீட்டர் 1072.35 ற்காக ரூபா. 402,131 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

உ. ஒட்டுமொத்தமாக எடுத்த போது இக்கட்டிடம் விதிமுறையற்ற நிர்மானப்பணியால் கட்டிடத்தில் மலசலகூட அமைப்பு முழுமையாக பயனுறாத வகையில் காணப்பட்டதுடன் வாகன தரிப்பிடம் செய்யும் கட்டிடத்தில் உள்ளே நிர்மானிக்கப்பட்ட நீரினால் மூழ்க ஆரம்பித்திருந்தது.

## 3.7 <u>திட்டம் தாமதம் செய்தல்</u>

இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

அ. தொரின் தொடரட்ட கமின் கமட்ட வேலைத்திட்டத்தின் ஏற்பாட்டின் கீழ் சியம்பலாகஸ் தென்ன – மாவில்மட முஸ்லிம் பள்ளிப் பாதையை முதலாம்குறுக்குச் சந்தில் இருந்து புகையிரதப்ப பாதை வரையிலான உள்ள பாதையை அபிவிருத்தி செய்யும் திட்டத்திற்கு ரூபா. 1,000,000 ஏற்பாடு கிடைத்திருந்தாலும் அப்பாதை ரயில் காடு என பின்னால் தெரியப்பட்டதால் அத்திட்டத்தை அமுல்படுத்த இயலாமல் இருந்தது. சரியான சாதகமான ஆய்வுகள் முறையான திட்டத்தின் கிழ் திட்டம் இனங்காணப்படாதது காரணமாக இருந்ததாக தெரியப்பட்டது.

ஆ. 2012, 2013 மற்றும் 2014 வருடங்களுக்கு திட்டம் நிறைவு செய்ய ரூபா. 90,632,252 பெறுமதியுடைய 24 திட்டங்கள் மீளாய்வாண்டின் இறுதியின் போது செயற்படுத்தப்படாமல்

காணப்பட்டது. அத்திட்டங்கள் 01 வருடத்திலிருந்து 03 வருடகாலப்பகுதியில் ஆரம்பித்து இதுவரை நிறைவு பெறாத திட்டங்களாகக் காணப்பட்டது.

இ. 2014 ஆம் வருடத்தில் செயற்பட்ட கந்தே வீதிய கட்டிடங்களில் உலக பாரம்பரிய பெயர்ப் பலகைகள் பொறுத்தும் திட்டத்தின் 28 வியாபாரஸ்தலங்கள் இனங்கண்டிருந்த போதும் 02 வருட கால தாமதத்துடன் ஒரு வியாபார ஸ்தலத்திற்கு மட்டும் பெயர்பலகை பொறுத்தப்பட்டிருந்தது.

3.8 உக்காத குப்பைகள் முகாமைத்துவம்

உக்காத குப்பைகள் முகாமைத்துவத்திற்காக 06 சுகாதார பிரிவுகளுக்கு பிரித்து அதிகாரிகள் மற்றும் சேவகர்கள் 567 வண்டி வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் 263 ஆகியன வளங்கள் செலுத்தப்பட்டு தினசரி சேர்க்கப்படுகின்ற குப்பைகள் 130 டொன் அளவு கொம்போஸ்ட் தயாரிப்பதற்கோ அல்லது வேறு முறைகளுக்கோ பயன்படுத்துதல் மற்றும் சரியான முகாமைத்துவம் இல்லாமல் சுற்றாடல் அனுமதிப்பத்திரமின்றி கொஹாகொட அமைந்திருந்த தேக்கவத்த இடத்தில் கொட்டப்பட்டு வருவதாக வெளிக்காட்டப்பட்டது. இது காரணமாக அப்பிரதேசத்தில் வசிப்பவர்களுக்கு பல்வேறு நோய்கள் பரவும் அபாயம் காணப்பட்டதோடு சூழல் மாசடைந்து பிரதேசம் கவலைக்கீடான நிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருந்தது.

3.9 வாகன கட்டுப்பாட்டு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

அ. 2003 ஆம் வருடத்தில் விபத்திற்குள்ளான 253 – 3800 இலக்கத்தினையுடைய வாகனத்திற்காக ரூபா 380, 460 ற்கான நட்டத்தை மீள் அரவிடுவதற்கோ சரியான தீர்மானம் எடுக்காமல் கணக்குகளில் கொண்டுவரப்பட்டிருந்தது.

ஆ. 252 – 4088 இலக்கத்தினையுடைய வாகனம் 2015 டிசம்பர் 04 ஆம் திகதி 20.45 01 மணித்தியாலத்திற்கு சாரதி மூலம் அனுமதியின்றி சபை பூமிக்கு வெளிக்கு கொண்டு செல்லப்பட்டு அந்நாள் இரவில் விபத்திற்கு உள்ளாக்கப்படுதல்ஈ குடிபோதையில் வண்டியினை செலுத்துதல் சம்பந்தமாக பொலிஸார்கள் சட்ட அமுல்படுத்தியிருந்தாலும் அந்நிகழ்வு சம்பந்தமாக வாகன பொறுப்பதிகாரி எழுத்து மூலம் அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. சாரதி சம்பந்தமான நடவடிக்கை எடுக்காமல் 2015 டிசம்பர் 10 ஆம் திகதி அச்சாரதியை ஓய்வு பெறுவதற்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தது. விபத்திற்குள்ளான வாகனத்தை திருத்தம் செய்யாமல் விபத்து செய்யப்பட்ட சாரதி மூலம் பணம் பெற்று திருத்த வேலை சாரதி மூலம் செய்வதற்கு முறையற்ற வேலைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அத்தோடு இயந்திர பொறியியலாளரின் மதிப்பீட்டு அறிக்கை செய்யப்படாமல் சாரதியின் கொள்கைக்கு ஏற்ப கணக்கு கோரி திருத்தம் செய்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

4 கணக்குப் பொறுப்பும் நள்ளாளுகையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

அ. மீளாய்வாண்டிற்குள் தயார் செய்யப்பட்டிருந்த வரவு செலவுகளை மதிப்பீடு செய்யப்பட்ட செலவுகள் உண்மையான செலவுகள் உடன் ஒப்பிடுகையில் 06 செலவு விடயங்களுக்காக நூற்றிற்கு 23 முதல் 93 வரையிலான வேறுபாடு காணப்பட்டதால் வரவு செலவு திட்டம் பயனள்ளதாகக் காணப்படவில்லை.

ஆ. வருடாந்த வரவு செலசு திட்டத்தின் மூலதன செலவு விடயங்கள் 35517 II கீழ் கொஹாகொட குப்பை முற்றத்தில் ரூபா 5,000,000 மற்றும் தொழில் மற்றும் சுகாதார மண்டல அலுவலகங்களின் மலசலகூடங்கள் நிர்மானிப்பதற்கு ரூபா. 750,000 தொகை வேறுபடுத்தியிருந்தாலும் அவ் ஏர்பாடுகளின் முன்பள்ளி அபிவிருத்தி மற்றும் மைதானம் புதுப்பிப்பதற்காக ரூபா. 67,293 செலவளிக்கப்பட்டிருந்தது.

இ. வருடாந்த வரவு செலவு திட்டத்தின் 11517 IV கீழ் நகர மண்டபம் புதுப்பிப்பதற்காக 2,500,000 தொகை வேறுபடுத்தியிருந்தாலும் அத்தொகையிலிருந்து ரூபா. 507,495 தொகை தொடம்வல குடா மாவத்தை பாதை நிர்மான பணிக்காக செலவழிக்கப்பட்டிருந்தது.

4.2 <u>வருடாந்த கொள்முதல் திட்டம்</u>

ரூபா. 267,284,106 மூலதன செலவு சபை செலவழித்திருந்த போதும் மீளாய்வாண்டிற்கான கொள்முதல் திட்டம் திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

4.3 <u>சொத்து நிருவாகம்</u>

4.3.1 <u>பயன்படுத்தாத மற்றும் குறைப்பயன்பாட்டு சொத்துக்கள்</u>

அ. சபைக்குச் சொந்தமான 11 துறைகள் ஆயர்வேத தொழிற்சாலை மற்றும் 10 ஆயர்வேத மத்திய நிலையங்களுக்கான பெறுமதியினை இனங்காணாத சொத்துக்கள் 478 பகுதிகளுக்காக 1 வருட காலத்திற்கு முன்பிருந்து செயற்படாத மற்றும் குறைந்து செயற்பட்டதாகக் காணப்பட்டது.

ஆ. **<u>வேறு நிதிகள்</u>**
பொது நிதியின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த தொகையின் பெறுமதி ரூபா. 6,443,390 ஆன நிதி 03 வருட காலத்திற்கு முன்பிறுந்தே செயற்படாமல் காணப்பட்டது.

இ. **<u>செயற்படாத கையிறுப்பு நிதி</u>**
முதலீட்டின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த தொகையின் பெறுமதி ரூபா. 24,019,458 ஆன கையிறுப்பு நிதி 03 1980 வருடத்திலிருந்து 35 வருடங்களுக்கு மேலாக செயற்படாமல் காணப்பட்டது.

**4.3.2 <u>வருடாந்த தொகை கணக்கெடுப்பு</u>**
நிதி விதிமுறைகள் 756 பிரகாரம் மாநகர சபைக்குச் சொந்தமாக 15 துறை மற்றும் 5 பிரிவுகளின் மீளாய்வாண்டின் வருடாந்த தொகை கணக்கெடுப்பு 2016 ஜுலை 30 ஆம் திகதி வரையிலும் நடாத்தப்படவில்லை.

**4.3.3 <u>பெறுநிதி திட்டம்</u>**
மீளாய்வாண்டின் பெறுநிதி திட்டம் திட்டமிடாமல் காணப்பட்டது.

**4.3.4 <u>செயற்பாட்டுத் திட்டம்</u>**
மீளாய்வாண்டின் செயற்பாட்டுத் திட்டம் திட்டமிடப்படாமல் இருந்தது.

**5.** **<u>முறைகள் மற்றும் கட்டுப்பாடுகள்.</u>**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் கவனம் தேவைப்படுகின்றது.

அ. கணக்கீடு
ஆ. உள் நிருவாகம்
இ. நிதி நிருவாகம்
ஈ. வரவு நிர்வாகம்
உ. ஒப்பந்த நிருவாகம்
ஊ. சொத்து நிருவாகம்
எ. கடன் கொடுத்தோர்/ வாங்கியோர் நிருவாகம்